1992 மார்ச் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மேலும் ஏரிகளைப் பராமரித்து, பழுதுபார்ப்பதற்காக, 1991–92 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப் பட்டுள்ள ரூ. 3.50 கோடி நிதியொதுக்கத்திற்குக் கூடுதலாக இந்த மானியக் கோரிக்கையில் ரூ. 1.40 கோடி சேர்க்கப்பட் டுள்ளது.

14. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளில் கான்கிரீட் கூரைத் தளம் அமைப்பதற்காக, 'மானியக் கோரிக்கை எண். 31—ஆதி திரா விடர் பழங்குடியினர் நலம்' என்பதன்கீழ், ரூ. 8.54 கோடி நிதியொதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள ரூ. 11.50 கோடி தொகைக்குக் கூடுதலாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

15. 31–3–1990ஆம் நாளன்றுள்ளபடி, மாநில ஒருங் கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்களின்கீழ் நிலுவையாக இருந்த கடன்களையும், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிலுவையாக இருந்த கடன்களில் 50 சதவீதத் தொகையையும் மானியமாக மாற்றுவது தொடர்பாக, 'மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி' என்பதன் கீழ் ரூ. 33.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. பல்வேறு திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக, நகராட்சி மன்றங்களுக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் நகராட்சி நகர்ப் பகுதி மேம்பாட்டு நிதிக்கு தொகை வழங்கும் பொருட்டு, 1991–92 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள ரூ. 15.00 கோடி தவிர, இந்த மானியத்தின் கீழ் ரூ. 9.49 கோடி கூடுதல் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

16. இதுவரையில், இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான், சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். அவையில் வெக்கப் பட்டுள்ள குறிப்பில் இந்த இனங்கள் பற்றிய முழு விவரங்களும் அடங்கியுள்ளன. 1991-92 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப் பீடுகளில் கோரப்பட்டுள்ள தொகைக்கு ஒப்புதல் அளிக்குமாறு இந்த அவையை நான் வேண்டிக் கொள்கிறேன். வணக்கம்.

7. அறிவிப்புகள்

(அ) இறுதித்துணை நிதிநிலை அறிக்கை, 1991–92—வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991–92 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கை

களின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் மாண்பு மிகு உறுப்பினர்கள், அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க 25—3—1992, அதாவது நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் செயலகத்தில் கொடுக்க வேண்டும்.

8. மானியக் கோரிக்கைகள் 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம்.

(ஆ) கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.

(இ) கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை.

(ஈ) கோரிக்கை எண் 58—சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

(உ) கோரிக்கை எண் 59—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,44,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் " என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 688. திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"To discuss the unchecked foot-board travel in State-owned buses in Madras City and the need to check this practice,

நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: